1995 நவம்பர் 3]

இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. காரணம் விசைத்தறிகள் நிறுவப்பட்டு கிட்டத்தட்ட 40,50 ஆண்டுகளுக்கு மேலாகியிருக்கின்ற நிலையில் அவை மிகவும் பழமையாக இருப்பதால் அவற்றை பயன்படுத்த முடியாத சூழ்நிலையில்தான் அவைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. புதிய விசைத்தறி கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக புதியதாக அமைத்துக் கொடுப்பார்களேயானால் இந்த தனியார் விசைத்தறிகள் அனைத்தும் கூட்டுறவுச் சங்கத்திலே பயன் அடைவதன் மூலம் அரசுக்கு போதிய வருமானமும் அதன்மூலம் வேலைவாய்ப்பும் நிறைய கிடைக்கிற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், பழைய விசைத்தறிகளைப் புதுமையாக்கி அதை விரிவுபடுத்தி, மீண்டும் பல்வேறு நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்கான திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் பழைய விசைத்தறிகள் புதியதாக மாற்றப்பட்டுள்ளன. இன்றைக்கு எல்லா இடங்களுக்கும் பழுதுபட்ட விசைத்தறிகளை மாற்றி கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்படியிருப்பின் அந்த விசைத்தறிகள் மாற்றப்படும். அதைப்பற்றி தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திற்குச் சொன்னாலே அவர்கள் மாற்றித் தருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

15—

அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலைத் திறனை உயர்த்துதல்

42759*—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலைத் திறன் 12,500-இல் இருந்து 25,000 ஸ்பின்டில்களாக உயர்த்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம், மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலை லாபத்தில் இயங்குகின்ற கூட்டுறவு நூற்பாலை ஆகும். இங்கு 1982 ஆம் ஆண்டு 25 ஏக்கர் நிலப்பரப்பில் 25,000 ஸ்பின்டில்கள் மூலம் நூற்பாலை நிறுவுவதற்கு திட்டமிட்டு 12,500 ஸ்பின்டில்கள் மூலம் இப்பொழுது இயங்கிக் கொண்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விரிவுபடுத்த சாத்தியக்கூறு இல்லை என்று கூறினார்கள். 12,500 ஸ்பின்டில்களை 25,000 ஸ்பின்டில்களாக மாற்றுவதன் மூலம் வேலைவாய்ப்பை அதிகப்படுத்துவதற்கும், அதே சமயம் உற்பத்தித் திறன் அதிகமாகி லாபத்தில் இயங்குவதற்கும் சாத்தியக்கூறு இருக்கிறது. ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து அங்கே வேலைவாய்ப்பை அதிகப்படுத்துவதற்கும் லாபத்தை ஈட்டுவதற்கும் 25,000 ஸ்பின்டில்களாக உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலை 1982-ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. 1985-ஆம் ஆண்டு இந்த நூற்பாலை உற்பத்தியைத் துவங்கிய ஆண்டு ஆகும். ஆனால் 1985 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றையதினம் வரை முழுக்க நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஒரு ஆண்டு கூட லாபத்தில் இயங்கவில்லை. இன்றைக்கு இந்தக்கூட்டுறவு நூற்பாலை 5 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலேயே முழுக்க, முழுக்க ஆதி திராவிட தொழிலாளர்களைக் கொண்டு இயங்கி வரக்கூடிய ஒரே கூட்டுறவு நூற்பாலை இந்த நூற்பாலை தான். ஆகவேதான் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆதிதிராவிட மக்கள் மீது அதிக அளவுக்கு அன்பும், பாசமும் கொண்டிருக்கிற ஒரே முதலமைச்சர் என்ற (மேசையைத் தட்டும் ஒலி)

காரணத்தால் இன்றைக்கு அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் இந்த ஆலையை தொடர்ந்து நடத்த முடிவு எடுத்து நடத்தச் சொல்லியிருக்கிறார்கள். அரசும் நடத்திக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு இதை லாபத்தில் கொண்டு வருவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படி லாபத்தில் வரும் என்று சொன்னால் நிச்சயமாக *12,500* ஸ்பின்டில்ஸ் என்பது *25,000* ஸ்பின்டில்ஸ் ஆக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களே அதைப் பாராட்டுகின்ற சூழ்நிலையில் சென்ற முறை பேப்பர் வாயிலாக அறிவித்தார்கள். இருப்பினும் கூட்டுறவு நூற்பாலையில் இருக்கின்ற அந்த வேஸ்ட் காட்டனை உபயோகம் செய்து ஓப்பன் ஸ்பின்னிங் என்று சொல்லத்தக்க அளவுக்கு நம்பர் *10* லிருந்து *16* ஆம் நம்பர் வரை உபயோகம் செய்ய இந்த கூட்டுறவு நூற்பாலையில் இடம் இருக்கிறது, கட்டிடங்கள் இருக்கின்றன; மேலும் அதை விரிவு செய்ய அரசின் அனுமதிதான் தேவை. ஆகவே, மிஷின் மட்டும் வாங்கிக் கொடுத்து மேலும் வேலைவாய்ப்பு ஏற்படுத்த அந்த ஓப்பன் ஸ்பின்னிங்கைத் துவக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு நூற்பாலை மட்டுமல்ல, பொதுவாக தமிழகத்தில் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிற அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளையும் லாபத்தில் கொண்டுவருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கைத்தறித் துறை செயலாளர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து ஆராய்ந்து அதன் அறிக்கையைத் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கை பெறப்பட்டவுடன் நஷ்டத்தைப் போக்கி லாபத்தில் கொண்டு வர அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *16*, டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.